මුදල්, ආර්ථික ස්ථායීකරණ සහ ජාතික ප්‍රතිපත්ති අමාත්‍යාංශය
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு
MINISTRY OF FINANCE, ECONOMIC STABILIZATION AND NATIONAL POLICIES

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව | செயலகம், கொழும்பு 01, இலங்கை. | The Secretariat, Colombo 01, Sri Lanka.

කාර්යාලය / அலுவலகம் / Office: 011-2484500, 011-2484600, 011-2484700
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 011-2449823
වෙබ් අඩවිය / இணையதளம் / Website: www.treasury.gov.lk

මගේ අංකය / எனது இல / My No: BD/CBP/01/01/05-2023
ඔබේ අංකය / உமது இல / Your No:
දිනය / திகதி / Date: 2023.12.29

**வரவுசெலவுத்திட்ட சுற்றுநிருப இல. : 05/2023**

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண சபைகளின் பிரதான செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள் / மாவட்டச் செயலாளர்கள்
அரச கூட்டுத்தாபனங்கள் / பல்லைக்கழக மானியங்கள் ஆணைக்குழு / நியதிச்சட்ட சபைகளின் தலைவர்கள்

**<u>2024 ஆண்டில் செலவினங்களை மேற்கொள்வதற்கு அதிகாரமளித்தல் மற்றும் பொதுச் செலவினங்களை முகாமைசெய்தல்</u>**

**01. செலவினங்களுக்கான அதிகாரமளித்தல்**

2023 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தால் பரிந்துரைக்கப்பட்ட வரையறைகளுக்கு உட்பட்டு, 2024 ஆம் நிதியாண்டின் செலவினங்களைச் செய்வதற்கு ஏதுவாக, ஒருங்கிணைந்த நிதியிலிருந்து திரும்பப் பெறுவதற்கு அதிகாரம் அளிக்கும் உத்தரவுகளில் நிதிப் பாடத்திற்குப் பொறுப்பான அமைச்சர் கையெழுத்திட்டுள்ளார்.

அதன்படி, 2024 ஆம் ஆண்டில் பணம் செலுத்தும் வவுச்சர்கள் மற்றும் பிற ஆவணங்களில் தொடர்புடைய அதிகாரம் பின்வருமாறு குறிப்பிடப்பட வேண்டும்;

| | |
|---|---|
| அ) பொது அரச சேவைகள் | - 2024 இன் 1 ஆம் இலக்க சாதாரண ஆணைப்பத்திரம் |
| ஆ) விஷேட சட்ட சேவைகள் | - 2024 இன் 1 ஆம் இலக்க விசேட சட்டசேவை ஆணைப்பத்திரம் |
| இ) முற்பண செயற்பாடுகள் | - 2024 இன் 1 ஆம் இலக்க முற்பண ஆணைப்பத்திரம் |

**02. பொதுச் செலவினம் மீதான முகாமைத்துவப் பொறுப்பு**

அனைத்து பிரதான கணக்கீட்டு அலுவலர்களும், தங்கள் எல்லைக்கு உட்பட்ட நிறுவனங்களின் நிதி நிர்வாகத்தின் போதுமான தன்மையை உறுதி செய்வதற்காக நிதி அமைச்சருக்கு பொறுப்புக்கூற வேண்டும். மேலும், வருடாந்த வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளின் மூலம் ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாட்டு வரையறைகளை விஞ்சாமல் செலவினங்களை முகாமைசெய்தல், பிரதான கணக்கீட்டு அலுவலர்கள், கணக்கீட்டு அலுவலர்கள் அதேபோன்று விடயத்திற்குப் பொறுப்பான அலுவலர்களின் பொறுப்பாகும். அதன்படி, அனைத்து பிரதான அலுவலர்கள் மற்றும் கணக்கீட்டு அலுவலர்கள் 2024 ஆம் ஆண்டிற்கான அங்கீகரிக்கப்பட்ட வரையறைக்குள் செலவினங்களைச் செய்வதற்கு நிறுவனங்களின் மீது தங்கள் கட்டுப்பாட்டைப் பயன்படுத்துவார்கள்.

வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீடுகள் இல்லாமல் செய்யப்படும் உறுதிமொழிகளுக்கு திறைசேரி பொறுப்பாகாது என்பதால், அத்தகைய செலவினங்களுக்கு சம்பந்தப்பட்ட அலுவலர்கள் தனிப்பட்ட முறையில் பொறுப்பாவார்கள்.

**03. 2024 ஆம் ஆண்டில் பொதுச் செலவின முகாமைத்துவம்**

2024 ஆம் ஆண்டிற்கான அரசிறை இலக்குகளுக்கு ஏற்ப மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.8 சதவீதத்திற்கு சமமான ஆரம்ப மிகையை அடைய வேண்டும் என்ற விடயத்தைக் கருத்திற் கொண்டு, 2024 ஆம் ஆண்டில் பொதுச் செலவினங்கள் பொதுமக்களிடையே வலுவான ஒழுக்கத்தைப் பேண வேண்டும் என்பதுடன் நிதி மற்றும் பொது செலவினங்களை விவேகமான முறையில் முகாமைசெய்தல் வேண்டும். இச்சூழலில், தற்போது நடைமுறையிலுள்ள செலவினக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் குறித்த அறிவுறுத்தல்கள் மேலும் பொருந்துவதுடன் சிறந்த செலவினக் கட்டுப்பாட்டிற்காக ஏற்கனவே உள்ள அனைத்து சுற்றறிக்கை விதிகளையும் புதுப்பித்து புதிய சுற்றறிக்கை எதிர்காலத்தில் வெளியிடப்படும்.

2024 ஆம் ஆண்டில் செலவுகளைச் செய்யும்போது கீழே குறிப்பிடப்பட்டுள்ள முன்னுரிமைகளின் வரிசையைப் பின்பற்ற வேண்டும்.

(அ) நிலுவையிலுள்ள விலைப்பட்டியல்கள் ஏதேனும் இருப்பின், ஏதேனும் நிலுவையிலுள்ள பொறுப்புகள் இருக்கக்கூடாது என்பதால் அவற்றைத் தீர்த்தல்.

(ஆ) வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளை விரைவாக முறையாக செயல்படுத்துதல்.

(இ) இறுதிக் கட்டத்தில்லுள்ள வெளிநாட்டு நிதியுதவியின் கீழ் செயற்படுத்தப்படும் கருத்திட்டங்களை அமுல்படுத்துதல்.

(ஈ) உள்நாட்டு நிதியுதவியின் கீழ் செயற்படுத்தப்படும் கருத்திட்டங்களுக்கு அதிக முன்னுரிமை வழங்கி செயற்படுத்துதல்.

(இ) மதிப்பீட்டின் மூலம் ஒதுக்கீடுகள் வழங்கப்பட்ட புதிய பொறுப்புகள் தொடர்பான செலவுகளை மேற்கொள்ளல்.

**04. செலவின முன்மொழிவுகளை செயல்படுத்துதல்**

எவ்வாறாயினும், வரவு செலவுத்திட்ட உரை -2024 இல் குறிப்பிடப்பட்டுள்ள செலவின முன்மொழிவுகளை செயற்படுத்துவதற்கான ஏற்பாடுகள், அத்தகைய முன்மொழிவுகள் நேரடியாக தொடர்புடைய நிறுவனங்களுக்கு ஏற்கனவே ஒதுக்கப்பட்டுள்ளன என்பதனை 2023.12.14 ஆந் திகதிய MF/NP/Gen/2024/01 ஆம் இலக்க எனது கடிதம் மூலம் நான் ஏற்கனவே தெரிவித்துள்ளேன். அத்தகைய செலவின முன்மொழிவுகளைச் செயல்படுத்துவதற்குப் பொறுப்பான நிறுவனங்கள், மேற்கூறிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு முன்னதாக, செலவின முன்மொழிவுகள் குறித்த கருத்திட்ட எண்ணக்கரு ஆவணங்கள், கருத்திட்ட முன்மொழிவுகள் மற்றும் செயற் திட்டங்களை தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும். 2023.12.18 ஆந் திகதிய 23/2468/601/068 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் முடிவின்படி, சில செலவின முன்மொழிவுகள் பல நிறுவனங்களுடன் இணைந்து செயற்படுத்தப்பட வேண்டியிருந்தால், நிதி ஒழுங்குமுறை இல. 208 இன் படி, நிதி ஏற்பாடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்ட அமைச்சு / நிறுவனத்தின் பிரதான கணக்கீட்டு அலுவலர் பிற தொடர்புடைய நிறுவனங்களுக்கு ஒதுக்கீடுகளை வழங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

தற்போது சேவையிலுள்ள அரச ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியம் பெறுபவர்களின் வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவை அதிகரித்தல், விதவைகள், தபுதாரர்கள் மற்றும் விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியங்களுக்கான (W&OP) பங்களிப்பின் கழித்தல் சதவீதத்தை திருத்தல் மற்றும் உள்ளூராட்சி அதிகார சபைகளின் சுயநிதியை ஊக்குவித்தல் தொடர்பான வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்தல் தொடர்புடைய சுற்றறிக்கைகள் / வழிகாட்டுதல்கள் எதிர்காலத்தில் பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் வெளியிடப்படும்.

வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகள் - 2024 இன்படி மாகாண சபைகள் தனியான செலவின அலகுகளாக அங்கீகரிக்கப்பட்டுள்ளதால், வரவு செலவித்திட்ட செயற்பாடுகள் மற்றும் தொடர்புடைய தேவையான விடயங்களை முன்னெடுத்தல் தொடர்பில் மாகாண சபைகளின் பிரதம செயலாளர்களை பிரதம கணக்கீட்டு அலுவலர்களாக நியமிப்பது பற்றிய தேவையான அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டுதல்களை பொது நிதி, திறைசேரி செயற்பாடுகள் மற்றும் அரச கணக்குகள் திணைக்களங்கள் வெளியிடும்.

**05. அர்ப்பணிப்பு முகாமைத்துவம்**

எந்தவொரு உறுதிப்பாட்டிலும் நுழைவதற்கு முன், ஒவ்வொரு செலவினத்திற்கும் போதுமான வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடுகள் உள்ளனவா என்பதை உறுதிப்படுத்தல் வேண்டும். அரசாங்கம் மற்றும் ஒப்பந்ததாரர்கள் / சேவை வழங்குநர்கள் தீர்க்கப்படாத பொறுப்புகள் குவிவதால் ஏற்படும் சிரமங்களைத் தடுப்பதற்காக, ஒதுக்கீடுகள் செய்யப்பட்டிருந்தாலும், எந்தவொரு உறுதிப்பாட்டையும் செய்வதற்கு முன் கட்டுநிதி கிடைக்கிறதா என்பதைச் சரிபார்க்க வேண்டியது அவசியமாகும்.

2024 ஆம் ஆண்டிற்கான ரூபா 500 மில்லியனுக்கு அதிகமான மூலதனச் செலவுப் பொருட்கள் அல்லது பல ஆண்டுகளில் செலுத்த வேண்டிய மொத்தச் செலவு ரூபா 1,000 மில்லியனுக்கும் அதிகமான உறுதிமொழிகளில் நுழைவதற்கு முன் திறைசேரி செயற்பாட்டுகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தினைப் பெறுதல்வேண்டும். இது சம்பந்தமாக, திறைசேரி செயல்பாட்டுகள் திணைக்களம் காத்திருப்புப் பட்டியலைப் பராமரிக்கும் என்பதுடன் நிதி நிலைமை மற்றும் முன்னுரிமைகளுக்கு ஏற்ப அதன் இணக்கப்பாட்டினை வழங்கும்.

**06. மேலதிக ஒதுக்கீடுகளுக்கான கோரிக்கை**

தேசிய வரவு செலவுத் திணைக்களத்தின் கீழ் "குறைநிரப்பு ஒத்துழைப்பு சேவைகள் மற்றும் எதிர்பாரா பொறுப்புகள் கருத்திட்டத்திற்கு" நிதி ஒதுக்கீடுசெய்யப்பட்டுள்ளன என்ற வகையில் செலவின முகவர்களுக்கு ஏற்கனவே ஏற்பாடுசெய்யபட்ட ஒதுக்கீட்டை விட மேலதிக ஒதுக்கீடுகளை வழங்குவதற்கான வாய்ப்பில்லை என்பதனால் வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுகளை செயல்படுத்துவது தொடர்பான தேவைகளுக்கு மட்டுமே வரையறுக்கப்பட்டுள்ளது. எனவே, 2024 இல் எழும் செலவினங்களை முறையாக முன்னுரிமை அளித்து ஏற்பாடுசெய்யப்பட்ட ஒதுக்கீட்டிற்குள் முகாமைசெய்ய வேண்டும் என்று வலியுறுத்தப்படுகிறது.

**07. நிதி ஒழுங்குவிதி இல. 66/69 இன் கீழ் ஒதுக்கீடுகளை மாற்றுதல்**

நிதி ஒழுங்குவிதி இல. 66/69 இன் கீழ் ஒதுக்கீடுகளை மாற்றுவதற்கான கோரிக்கைகள் செலவினங்களைச் செய்வதற்கு முன் செய்யப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்படுகிறது. நிதி ஒழுங்குவிதி இல. 66/69 இன் கீழ் ஒதுக்கீடுகளை மாற்றுவதற்கான கோரிக்கைகள் 2024.12.31 க்கு முன் ஒருங்கிணைந்த திறைசேரி முகாமைத்துவ முறைமை (ITMIS) மூலம் தேசிய வரவுசெலவுத் திட்டத் திணைக்களத்தின் தொடர்புடைய அதிகாரிகளுக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

2024.12.31 க்குப் பிறகு நிதி ஒழுங்குவிதி இல. 66/69 இன் கீழ் ஒதுக்கீடுகளை மாற்றுவது ஏற்கனவே ஒதுக்கீடுசெய்யப்பட்டதைவிட அதிகமாக பணம் செலுத்தப்பட்ட சந்தர்ப்பங்களில் மட்டுமே மேற்கொள்ளப்படும் என்று மேலும் வலியுறுத்தப்படுகிறது. மேலும், நிதி ஒழுங்குவிதி இல. 66/69 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு முன் அனுமதியைப் பெறத் தவறியதற்கு போதுமான காரணங்கள் வழங்கப்படாவிட்டால் அத்தகைய மாற்றங்கள் அங்கீகரிக்கப்படாது.

**08. முற்பணக் கணக்கு செயற்பாடுகள்**

2024 ஆம் ஆண்டிற்காக பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வரையறைகளுக்குள் முற்பணக் கணக்குச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அதிகபட்ச செலவின வரையறையில் எவ்வித அதிகரிப்பும் அனுமதிக்கப்படாது என்பதால், செலவினங்கள் அவ்வப்போது மதிப்பாய்வு செய்யப்பட்டு கொடுக்கப்பட்ட வரையறைகளுக்குள் முகாமை செய்யப்படுதல் வேண்டும்.

இது சம்பந்தமாக, குறைந்தபட்ச பெறுகைகளை அடைவதற்கு விசேட கவனம் செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன் உற்பத்தி, வணிக மற்றும் விசேட முற்பணக் கணக்குகள் தொடர்புற்ற முற்பணக் கணக்குச் செயற்பாடுகள் தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ள அதிகபட்ச பொறுப்பு வரையறைகளை மீறக்கூடாது.

2024.01.01 முதல், முன்பு செய்தது போல், அனைத்து அரசாங்கத்துறை அலுவலர்களும் அனர்த்தக் கடன் வசதிக்கு விண்ணப்பிக்க உரிமை பெறுவார்கள்.

**09. பொதுவான விடயங்கள்**

நிரல் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் கீழ் வரும் நடவடிக்கைகள் ஏனைய அமைச்சுக்கள் / திணைக்களங்கள் அல்லது மாவட்ட செயலகங்கள் மூலம் செயற்படுத்தப்படும் போது, நிதி ஒழுங்குவிதிகள் இல. 208 இன் கீழ், சம்பந்தப்பட்ட நிதியாண்டின் இறுதிக் காலாண்டிற்கு முன்னதாக போதுமான கால அவகாசத்தை உறுதிசெய்து ஒதுக்கீடுகள் மாற்றப்படல் வேண்டும்.

நிதி ஒழுங்குவிதிகள் இல. 66 இன் கீழ் மேலதிக ஒதுக்கீடுகள் மற்றும் ஒதுக்கீடுகளை மாற்றுவதற்கான அனுமதியைப் பெறுவதற்கான கோரிக்கைகளை பொது திறைசேரிக்கு சமர்ப்பிக்கும் போது, அது அமைச்சின் பிரதான கணக்கீட்டு அலுவலரின் / செயலாளரின் கையொப்பத்தின் கீழ் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்று வலியுறுத்தப்படுகிறது. அத்தகைய கோரிக்கைகளை பொது திறைசேரிக்கு அனுப்புவதற்கு முன், அமைச்சின் பிரதான கணக்கீட்டு அலுவலர் / செயலாளர், அத்தகைய அங்கீகாரம் அவசியமா மற்றும் தற்போதுள்ள விதிகளுக்குள் தொடர்புடைய செலவினங்களை நிர்வகிப்பதற்கான சாத்தியக்கூறுகளை தனிப்பட்ட முறையில் பரிசீலிக்க வேண்டும்.

1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பிரிவு 8 (2) (அ) மற்றும் (ஆ) இல் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளின்படி, நியதிச்சட்ட சபையினால் நிதி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரத்தினைப் பெறுவதற்கான கோரிக்கைகள் மூலதனச் செலவு 2024.01.15 ஆந் திகதிக்கு முன் பொது திறைசேரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

**10. தெளிவுபடுத்தல்கள்**

இந்த சுற்றறிக்கை தொடர்பான ஏதேனும் தெளிவுகளுக்கு, பின்னிணைப்பு 01 இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி உங்கள் அமைச்சு / திணைக்களம்/ நிறுவனத்திற்கு பொறுப்பான தேசிய வரவு செலவுத் திணைக்களத்தின் தொடர்புடைய அலுவலர் அல்லது மேலதிக பணிப்பாளர் நாயகத்தை (0112-484681) தொடர்பு கொண்டு பெறலாம்.

**ஒப்பம்/**
**கே.எம். மஹிந்த சிறிவர்தன**
**திறைசேரியின் செயலாளர்**

பிரதிகள்:

1. சனாதிபதியின் செயலாளர்
2. பிரதமரின் செயலாளர்
3. அமைச்சரவையின் செயலாளர்
4. கணக்காய்வாளர் நாயகம்
5. செயலாளர், நிதி ஆணைக்குழு

Annexure 1

# Department of National Budget

## List of Subject Officers

| Head No. | Ministries/Special Spending Unit | Name of the Officer in Charge | Designation | Contact No. | Official E-Mail Address |
|---|---|---|---|---|---|
| 1. - 22 | Special Spending Unit | Ms. Anjalika Gunasekara | Director | 011-2484688 (Ext. -1337) | gunasekera.ak@nbd.treasury.gov.lk |
| 101 | Buddha Sasana, Religious and Cultural Affairs | Ms. Sanjeewani Weerasekara | Director | 011-2484685 (Ext. -1308) | weerasekara.wmsk@nbd.treasury.gov.lk |
| 102 | Finance, Economic Stabilization and National Policies | Mr.M.M.M.N.Mohotty | Assistant Director | 011-2484740 (Ext. -1115) | mohotty.mmmn@nbd.treasury.gov.lk |
| 103 | Defence | Ms.Lakshika Senarathna | Deputy Director | 011-2034429 (Ext. -4346) | senarathna.pdlp@nbd.treasury.gov.lk |
| 105 | Mass Media | Mr. P.R.K.Senanayake | Director | 011-2151457 (Ext. -2306) | senanayake.prk@nbd.treasury.gov.lk |
| 110 | Justice, Prisons Affairs and Constitutional Reforms | Mr. P.R.K.Senanayake | Director | 011-2151457 (Ext. -2306) | senanayake.prk@nbd.treasury.gov.lk |
| 111 | Health | Ms.Jamithri Amarasekara | Deputy Director | 011-2484667 (Ext. -1302) | amarasekara.hljk@nbd.treasury.gov.lk |
| 112 | Foreign Affairs | Mr. Viraj Wijewardena | Director | 011-2484677 (Ext. -1313) | wijewardhana.hrvp@nbd.treasury.gov.lk |
| 116 | Trade, Commerce and Food Security | Mr.W.M.R. Wijekoon | Director | 011-2484690 (Ext. -1324) | wijekoon.wmr@nbd.treasury.gov.lk |
| 117 | Transport & Highways - Transport | Mr. J.M.Herath Banda | Director | 011-2484894 (Ext. -1008) | banda.jmh@nbd.treasury.gov.lk |
| | Transport & Highways - Highways | Mr. Parakrama Thennakoon | Deputy Director | 011-2484858 (Ext. -1279) | tennakoon.tmdp@nbd.treasury.gov.lk |
| 118 | Agriculture | Ms.G.G.U.K.Wijeratne | Assistant Director | 011-2484760 (Ext. -1326) | wijeratne.gguk@nbd.treasury.gov.lk |
| 119 | Power & Energy | Ms. Punya Rajapaksha | Deputy Director | 011-2484581 (Ext. -1010) | rajapaksha.rap@nbd.treasury.gov.lk |
| 122 | Tourism and Lands | Ms.Thoshini Jayaweera | Assistant Director | 011-2484600 (Ext. - 2024) | jayaweera.jmty@nbd.treasury.gov.lk |
| 123 | Urban Development and Housing | Mr. J.M.Herath Banda | Director | 011-2484894 (Ext. -1008) | banda.jmh@nbd.treasury.gov.lk |
| 126 | General Education and Higher Education | Ms.R.M.S.M. Ragaguru | Director | 011-2034445 (Ext. -2084) | rajaguru.rmsm@nbd.treasury.gov.lk |
| | Vocaonal Education | Ms. Sanjeewani Weerasekara | Director | 011-2484685 (Ext. -1308) | weerasekara.wmsk@nbd.treasury.gov.lk |
| 130 | Public Administration, Home Affairs, Provincial Councils and Local Government | Mr. M.J.M. Ifham | Director | 011-2484687 (Ext. -1322) | ifham.mjm@nbd.treasury.gov.lk |
| | District Secretariats | Ms.Lakmali Samarasekara | Deputy Director | 011-2484600 (Ext. - 1719) | samarasekara.sal@nbd.treasury.gov.lk |
| 149 | Industries | Mr.Rasika Wijekoon | Director | 011-2484690 (Ext. -1324) | wijekoon.wmr@nbd.treasury.gov.lk |
| 151 | Fisheries | Ms. H.M.T. Madhushani | Assistant Director | 011-2484600 (Ext. - 1775) | madhushani.hmt@nbd.treasury.gov.lk |
| 160 | Environment | Ms.Chandrika Senanayayake | Director | 011-2484579 (Ext. -1151) | senanayake.c@nbd.treasury.gov.lk |
| 161 | Wildlife and Forest Resources Conservation | Ms.Chandrika Senanayayake | Director | 011-2484579 (Ext. -1151) | senanayake.c@nbd.treasury.gov.lk |
| 166 | Water Supply | Mr. J.M. Herath Banda | Director | 011-2484894 (Ext. -1008) | banda.jmh@nbd.treasury.gov.lk |
| 171 | Women, Child Affairs and Social Empowerment | Ms Sreeni. Karunarathna | Additional Director General | 011-2034527 (Ext. -1320) | karunarathna.hwsp@nbd.treasury.gov.lk |
| 176 | Ports, Shipping and Aviation | Ms. Punya Rajapaksha | Deputy Director | 011-2484581 (Ext. -1010) | rajapaksha.rap@nbd.treasury.gov.lk |
| 186 | Technology | Mr.Rasika Wijekoon | Director | 011-2484690 (Ext. -1324) | wijekoon.wmr@nbd.treasury.gov.lk |
| 187 | Investment Promotion | Mr. Parakrama Thennakoon | Deputy Director | 011-2484858 (Ext. -1279) | tennakoon.tmdp@nbd.treasury.gov.lk |
| 189 | Public Security | Mr. P.R.K.Senanayake | Director | 011-2151457 (Ext. -2306) | senanayake.prk@nbd.treasury.gov.lk |
| 193 | Labour and Foreign Employment | Ms. G.D.M. Muditha Gunarathne | Accountant | 011-2151456 (Ext. -2027) | gunaratna.gdmm@nbd.treasury.gov.lk |
| 194 | Sports and Youth Affairs | Ms.Irudini Weerakoon | Assistant Director | 011-2484600 (Ext. - 1720) | weerakoon.wmiu@nbd.treasury.gov.lk |
| 198 | Irrigation | Ms.Thoshini Jayaweera | Assistant Director | 011-2484600 (Ext. - 2024) | jayaweera.jmty@nbd.treasury.gov.lk |
| 501 | Non Cabinet Ministry of state Plantation Enterprises Reform | Mr. Danasiri Wijebandara | Director (Act.) | 011-2484683 (Ext. -1318) | wijebandara.wmd@nbd.treasury.gov.lk |
| | Advance Account Activities | Ms. G.D.M. Muditha Gunarathne | Accountant | 011-2141546 (Ext. -2027) | gunaratna.gdmm@nbd.treasury.gov.lk |
| | ITMIS - Overall coordination | Mr. Danasiri Wijebandara | Director (Act.) | 011-2484683 (Ext. -1318) | wijebandara.wmd@nbd.treasury.gov.lk |